**May 24, 2011**

Honble Minister for Food reviewed the progress of Public Distribution System








மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.அக்ரி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் இன்று ( 24.05.2011 ) சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் பொது விநியோக திட்டச் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை (பொ) முதன்மைச்செயலாளர் திரு.வீ.கே.ஜெயக்கொடி.இ.ஆ.ப., உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.கா.பாலச்சந்திரன்.இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.வீரசண்முகமணி.இ.ஆ.ப., உட்பட அனைத்து மாவட்ட உயர் அலுவலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.